நீலகிரி மாவட்டத்தில்

தூய்மை காவலர்களுக்கு ரூ.1000 ஊக்கத்தொகையுடன் தீபாவளி பரிசு: கலெக்டர் லட்சுமி பவ்யா வழங்கினார்

நீலகிரி, அக். 17– நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டு, தூய்மை காவலர்களுக்கு தீபாவளி பரிசுத் தொகுப்புகள் மற்றும் ஊக்கத் தொகை வழங்கினார்.

உதகை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கடநாடு, தூனோய், எப்பநாடு, தொட்டபெட்டா, உல்லத்தி, பாலகொலா, முள்ளிகூர், இத்தலார், நஞ்சநாடு, மேல்குந்தா, தும்மனட்டி, கக்குச்சி, கூக்கல் உள்ளிட்ட 13 ஊராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் 268 தூய்மை காவலர்களுக்கு பரிசு வழங்கும் அடையாளமாக, 54 தூய்மை காவலர்களுக்கு வேட்டி, சேலை, இனிப்பு வகைகள் மற்றும் ஊக்கத் தொகையாக ரூ.1,000 வழங்கினார்.

அத்துடன், நலன் காக்கும் ஸ்டாலின் முகாமில் அனைவரும் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டார்களா என கலெக்டர் கேட்டறிந்து, அவர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகளை தெரிவித்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"நீலகிரி மாவட்ட எல்லையில் உள்ள முதுமலை புலிகள் காப்பகப் பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வில், பன்றி காய்ச்சல் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், பன்றி வளர்ப்போர் மற்றும் பண்ணை உரிமையாளர்களுக்கு இந்நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கூட்டங்கள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

இந்நோய் பன்றிகளுக்கே மட்டும் பரவக்கூடியது; இதர கால்நடை வளர்ப்போர் அச்சப்பட தேவையில்லை. மனிதர்களுக்கு இந்நோய் பரவாது. மாவட்ட நிர்வாகம் தேவையான முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது," என்றார்.

மேலும் அவர் கூறியதாவது,

"கன மழை பெய்ததில் இரண்டு இடங்களில் சிறிய அளவில் மண் சரிவு ஏற்பட்டது. அவை உடனடியாக நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களின் மூலம் சீரமைக்கப்பட்டன. கோத்தகிரி பகுதியில் சில இடங்களில் தடுப்பு சுவர் சேதம் ஏற்பட்டுள்ளது. அவற்றை சரிசெய்யும் பணிகள் நடந்து வருகின்றன. அபாயகரமான பகுதிகளில் தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப் படுகிறது," என்று தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், அனிதா, மேலும் பல அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெங்கடேஸ்வரா கலை கல்லூரி மாணவர்களுக்கு நூற்பாலையில் களபயிற்சி

ஈரோடு, அக். 17– ஈரோடு மாவட்டம் கோபி அருகே உள்ள ஒத்தக்குதிரை ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆடை வடிவமைப்புத் துறை மாணவ, மாணவிகள் கல்வி கற்றலின் ஒருபகுதியாக நூற்பாலையை நேரில் பார்வையிட்டனர்.

இப்பயணத்திற்கான விதிமுறைகளை சொல்லி முதல்வர் மோகனசுந்தரம் மாணவர்களை வழியனுப்பி வைத்தார்.

மாணவர்கள் காங்கயம் அருகே அரசம்பாளையத்தில் அமைந்துள்ள புவனேஸ்வரி நூற்பாலையை பார்வையிட்டனர்.

மாணவர்கள் நெசவுத் துறை செயல்முறைகள், நூல் உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் துணி தர பரிசோதனை போன்றவற்றை நேரடியாக பார்த்து தெரிந்து கொண்டனர்.

இத்துடன் கம்பெனி நிர்வாகிகள் ஜாபர் மற்றும் நிஷா ஆகியோர் மாணவர்களை அன்புடன் வழிநடத்தி, பல்வேறு படி முறைகள், பிரிவுகள் மற்றும் செயல்முறைகள் குறித்து விரிவாக விளக்கினர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆடை வடிவமைப்புத் துறைத் தலைவி ஷாலினி தலைமையில், பேராசிரியர்கள் கே.தேன்மொழி, பி.அனிதா, ஆர்.ஜே.சாதனா, டி.கௌசல்யா, டி.நித்யா ஆகியோர் இணைந்து செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் ஆடை வடிவமைப்பு துறையைச் சார்ந்த 120 மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் பங்கு கொண்டனர்.

குமாரபாளையத்தில் அப்துல்கலாம் பிறந்த நாள் விழா

குமாரபாளையம், அக். 17– குமாரபாளையம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ் சிந்தனைப் பேரவை அப்துல் கலாம் பிறந்த நாளை சிறப்பிக்கும் விதமாக குமாரபாளையம் சிஎஸ்ஐ நடுநிலைப்பள்ளி மாணவர்களைக் கொண்டு அத்தி, அரசு, நாவல், வேம்பு, புங்கன், பூவரசு மரக்கன்றுகளை நட்டது. நிகழ்விற்கு தமிழ் சிந்தனைப் பேரவைத் தலைவர் ரமேஷ் குமார் வரவேற்புரை செய்து, அப்துல்கலாம் பற்றிய விழிப்புணர்வு சொற்பொழிவாற்றி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

இந்நிகழ்வில் வட்டாட்சியர் பிரகாஷ் தலைமை வகித்தார். தமிழ் சிந்தனைப்பேரவை நிர்வாகிகள் ராஜு, ஆண்டியப்பன், சுந்தர்ராஜ், பாஸ்கரன் மற்றும் ஆசிரியர்கள் ராணி, ஜாய்ஸ் அருள் செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிஎஸ்ஐ நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சுகந்தி நன்றி கூறினார்.

விமானம் முதல் ஒட்டல் வரை ஒரே செயலியில் முன்பதிவு செய்யும் வசதி: ரேபிடோ நிறுவனம் அறிமுகம்

கோவை, அக். 17– இந்தியாவின் முன்னணி ரைட்ஷேரிங் தளமான ரேபிடோ, கோய்பிபோ, ரெட்பஸ் மற்றும் கன்பார்ம் டிகேடி (ConfirmTkt) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, மொபிலிட்டி துறையில் இந்தியாவின் முதல் உள்நாட்டு ஒன் ஸ்டாப் பயண தீர்வை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் பயனர்கள் இனி ஒரே ரேபிடோ செயலி வழியாகவே விமானம், ஓட்டல், பேருந்து மற்றும் ரெயில் முன்பதிவுகள் அனைத்தையும் ஒரே இடத்தில் செய்ய முடியும்.

இது தினசரி பயணங்களிலிருந்து நீண்ட தூர விடுமுறைதிட்டங்கள்வரை பயணத்தை முழுமையாக ஒருங்கிணைக்கக்கூடிய ஒரு நவீன தீர்வாக அமைகிறது.

ரேபிடோ இணை நிறுவனர் அரவிந்த் சங்கா கூறியதாவது:– "பயணத்தை எளிமைப்படுத்தி, மலிவு விலையில் அனைவருக்கும் அணுகக்கூடியதாக மாற்றுவது எங்கள் முக்கிய நோக்கம்.

இம்முயற்சியால், தினசரி சவாரிகளிலிருந்து நீண்ட தூரப் பயணங்கள் வரை, ரேபிடோ உண்மையான ஒன்ஸ்டாப் பயண கூட்டாளியாக மாறுகிறது," என்று தெரிவித்தார்.

மேக்மைடிரிப் இணை நிறுவனர் மற்றும் குழு தலைமை நிர்வாக அதிகாரி ராஜேஷ் மாகோவ், "இந்த கூட்டாண்மை, இந்தியாவின் டயர் 2 மற்றும் டயர் 3 நகரங்களில் உள்ள பயனர்களுக்குள் டிஜிட்டல் பயண வசதிகளை மேலும் விரிவுபடுத்தும்," என்று கூறினார். அதேபோல், கன்பார்ம் டிகேடி மற்றும் இக்சிகோ ரெயில்களின் தலைமை நிர்வாக அதிகாரி தினேஷ் குமார் கோதா, "இந்த கூட்டாண்மை மூலம் ரெயில் பயணங்கள் மேலும் எளிதாகவும் நம்பகமானதாகவும் மாறும்.

ரேபிடோ சுற்றுச்சூழலில் ரெயில் வசதிகள் இணைவதன் மூலம் பயணிகளுக்கு அதிக வசதி மற்றும் மலிவு விலை கிடைக்கும்," என்று தெரிவித்தார்.

50 மில்லியனுக்கும் மேற்பட்ட பயனர்களைக் கொண்டுள்ள ரேபிடோ, இப்போது இந்தியாவின் அன்றாட மற்றும் நீண்ட தூர பயண அனுபவத்தை ஒருங்கிணைக்கும் புதிய டிஜிட்டல் யுகத்தை உருவாக்கி வருகிறது.

JMJ பின்டெக் லிமிடெட்
CIN:L51102TZ1982PLC029253
பதிவு அலுவலகம்: கடை எண். 3, 1வது தளம், ஆதி விநாயக வளாகம், எண்.3, பேருந்து நிலையம், கோபால்சாமி கோயில் தெரு, கணபதி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் வடக்கு, தமிழ்நாடு, இந்தியா 641006
மின்னஞ்சல்: investor@jmjfintechltd.com இணையதளம்: https://www.jmjfintechltd.com

நிறுவனத்தின் சம பங்குதாரர்களின் கவனத்திற்கு

பொருள்: ஈவுத்தொகை செலுத்துவதை சாத்தியமாக்குவதற்காக KYC புதுப்பிப்புக்காக பங்குதாரர்களுக்கு கோரிக்கை.

செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் ("SEBI") மே 7, 2024 தேதியிட்ட முதன்மை சுற்றறிக்கை மற்றும் ஜூன் 10, 2024 தேதியிட்ட SEBI சுற்றறிக்கையின்படி ("SEBI சுற்றறிக்கைகள்"), KYC தேவைகளுக்கு இணங்கினால் மட்டுமே ஈவுத்தொகை செலுத்துவது மின்னணு முறையில் செய்யப்படும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. பங்குதாரர்கள், SEBI சுற்றறிக்கைகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி, அஞ்சல் முகவரியுடன் கூடிய PIN, மொபைல் எண், வங்கிக் கணக்கு விவரங்கள், ஆதாருடன் இணைக்கப்பட்ட PAN மற்றும் மாதிரி கையொப்பம் ("KYC விவரங்கள்") போன்ற KYC விவரங்களை நிறுவனம்/பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் (RTA) புதுப்பிக்க வேண்டும். 2024–25 நிதி ஆண்டிற்கான இறுதி ஈவுத்தொகையை நிறுவனம்/ஆர்டிஎ மின்னணு முறையில் செலுத்துவதற்கு வசதியாக, பங்குதாரர்கள் தங்கள் KYC விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இதன்படி, 10 ரூபாய் முகமதிப்புள்ள ஒரு சம பங்கிற்கு 0.25 பைசா தொகை செலுத்தப்படுகிறது. இது ஆகஸ்ட் 12, 2025 அன்று இயக்குனர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு, செப்டம்பர் 25, 2025 அன்று பங்குதாரர்களால் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

குழுவின் ஆணைப்படி
JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
ஜோஜு மடத்தும்படி ஜானி
DIN: 02712125
நிர்வாக இயக்குனர்

இடம்: கோயம்புத்தூர்
தேதி: 16.10.2025

வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
VASTU HOUSING FINANCE
யூனிட் எண். 203 & 204, 2வது தளம், ஏ விங், நவ்பாரத் எஸ்டேட், ஜக்காரியா பண்டர் மார்க் சாலை செவ்ரி (மேற்கு), மும்பை 400 015, மகாராஷ்டிரா
CIN No.: U65922MH2005PLC272501

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–ன் பிரிவு 13(2)–ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

அதேசமயம், வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், அதன் தலைமை அலுவலகம் மும்பை மூலம், கீழ்க்கண்ட கடன்தாரர்கள் / உத்தரவாததாரர்கள் / அடமானக்காரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது, அவர்கள் VHFCL–லிருந்து பெற்ற கடன் வசதிகளின் அசல் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்துவதில் தவறிவிட்டனர் மற்றும் எனவே அவை நிறைவேற்றப்படாத ஆஸ்திகளாக மாற்றப்பட்டுள்ளன. 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் பிரிவு 13(2)–ன் கீழ் அவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளில் அவை வழங்கப்படாமல் திரும்பியுள்ளன, மேலும் இது குறித்து பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்/உடன் கடன்தாரர்கள் பெயர் மற்றும் கடன் கணக்கு எண்.	பிரிவு 13(2)–ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	அடமான சொத்து குறித்த விவரம்
சகாயராஜ் ஏ (விண்ணப்பதாரர்), சாந்தி எஸ் (உடன் கடன்தாரர்) HL0000000204702	25 செப்டம்பர் 25 16 செப்டம்பர் 25 அன்று ரூ.1079312/– மற்றும் கூடுதல் வட்டி மற்றும் கட்டணங்கள்	திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், தாராபுரம் சார் பதிவு அலுவலகம், தாராபுரம் தாலுக்கா, சின்னபுதூர் கிராமம், நத்தம் சர்வே எண். 594/1,595/1,595/1C,595/2,594/1A மற்றும் 595/1C1, "ஜேவிபி கார்டன்", மனை எண்.363–ல் 654 சதுர அடி (60.75 சதுர மீட்டருக்கு சமம்) பரப்பளவு கொண்டது, இந்த சொத்து மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து பாதை மற்றும் பிற உரிமைகளுடன் தொடர்புடையது. வடக்கு – மனை எண்.364, தெற்கு – கெதல்ரேவ் தலைவர் சொத்து, கிழக்கு – மனை எண்.362, மேற்கு – 23 அடி தெற்கு வடக்காக லேஅவுட் சாலை

மாற்று அறிவிப்பு சேவைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்கள் மற்றும்/அல்லது அவர்களின் உத்தரவாததாரர்கள் (எப்போதும் பொருந்தும்) இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத் தொகையை செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறும்பட்சத்தில், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பு தேதியில் இருந்து 60 நாட்கள் முடிந்த பிறகு அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
மேற்கூறிய அறிவிப்பு, 13(13) பிரிவின் கீழ், கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களுக்கு தெரிவிப்பது யாதெனில், அடமானம் வைக்கப்பட்ட சொத்தை விற்கவோ/குத்தகைக்கு விடவோ/மாற்றவோ கூடாது

தேதி: 17.10.2025
இடம்: திருப்பூர்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்
ADITYA BIRLA CAPITAL
பதிவு அலுவலகம் : இந்தியன் ரயான் காம்பவுண்ட், வேரவல், குஜராத் 362 266.
கார்ப்பரேட் அலுவலகம்: 12வது தளம், ஆர் டெக் பார்க், நிர்லான் காம்ப்ளக்ஸ், ஹப் மால் அருகில், கோரேகான் (கி), மும்பை 400 063, மகாராஷ்டிரா.

கோரிக்கை அறிவிப்பு

2002ம் ஆண்டு (''சட்டம்'') கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் மற்றும் 2002ம் (''விதிகள்'') வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் விதி 3–ன் கீழ்

ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் இடையேயான ஒருங்கிணைப்பின் காரணமாக, 24.03.2025 அன்று அகமதாபாத்தில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட 11.03.2024 தேதியிட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின்படி, கீழே உள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து தொடர்பாக ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் தொடங்கிய அனைத்து SARFAESI நடவடிக்கைகளும், ஒருங்கிணைந்த நிறுவனமான ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது. கீழே கையொப்பமிட்டுள்ள, ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்டின் (ABCL) சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகவும், சட்டத்தின் பிரிவு 13(12) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, விதி 3 உடன், சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு (கள்) வெளியிட்டு, பின்வரும் கடன்தாரர்கள், அந்தந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அந்த அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பை தவிர்க்கிறார்கள் என்று கீழே கையொப்பமிட்டவர் நம்புகிறார், எனவே விதிகளின்படி ஒட்டுதல் மற்றும் வெளியீடு மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே சுருக்கமாகு கொடுக்கப்பட்டு உள்ளன:
மேற்கூறியவை தொடர்பாக, கடன்தாரர்கள் / சட்ட வாரிசுதாரர்கள் / சட்டப் பிரதிநிதிகளின் ஆகியோர் தொடர்புடைய அறிவிப்பு தேதியிலிருந்து ABCL–க்கு செலுத்த வேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை, அவர்களின் பெயர்களுக்கு எதிராக, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, பத்தி (d)–ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளிலிருந்து பணம் செலுத்திய தேதி மற்றும் / அல்லது கடன் வாங்கிய தேதி வரை, கடன் ஒப்பந்தம் மற்றும் கடன்தாரர்களால் நிறைவேற்றப்பட்ட பிற ஆவணங்கள் / எழுத்துப்பூர்வமாக ஏதேனும் இருந்தால் அவற்றின்படி செலுத்துமாறும் அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடனை முறையாக திருப்பிச் செலுத்துவதற்கான பாதுகாப்பாக, பின்வரும் ஈடுபெற்ற சொத்து(கள்) முறையே கூறப்பட்ட கடன்தாரர்களால் ABCL–ல்அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ. எண்.	கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் என்பிஏ தேதி	அசையா சொத்து குறித்த விவரம்
1	**1. திரு. ஆனந்த் பாபு,** (S/o. மகேந்திரன் V) கதவு எண். 5/199-1 கப்பல்வாடி வெங்கடசமுத்திரம், கிருஷ்ணகிரி, சிகரலப்பள்ளி, பர்கூர், பின்கோடு- 635104. தொடர்பு எண்: 8838285409. மின்னஞ்சல்: anandhbabushivanthika@gmail.com **மேலும்: திரு. ஆனந்த் பாபு,** உரிமையாளர் வாசுகி டெக்ஸ்டைல்ஸ் கதவு எண். 5/199-1 கப்பல்வாடி வெங்கடசமுத்திரம், கிருஷ்ணகிரி, சிகரலப்பள்ளி, பர்கூர், பின்கோடு- 635104. **2. திருமதி வாசுகி S,** (D/o. திரு. மகேந்திரன் C), கதவு எண். 5/199-1 கப்பல்வாடி வெங்கடசமுத்திரம், கிருஷ்ணகிரி, சிகரலப்பள்ளி, பர்கூர், பின்கோடு - 635104. தொடர்பு எண்: 6369426232. மின்னஞ்சல்: mv594631@gmail.com கடன் கணக்கு எண். ABSKMLA000000826321	07.10.2025 & 03.10.2025 மொத்த நிலுவைத் தொகை 09.10.2025 அன்று ரூ.26,60,940/-	**(அசையாச் சொத்து எண்.1ன் விவரம்) ஆவண எண். 1427/1996ன் படி.** i. சர்வே எண். எஸ். எண் - 754/9, ii. வருவாய் பதிவேட்டின்படி 754/9, iii. மொத்த விஸ்தீரணம் 41 1/2 +396+2291=2728 1/2 சதுர அடி. iv. கதவு எண் (சொத்து வரியின்படி) 5/199. v. சிகரலப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், பர்கூர் சார் பதிவு மாவட்டம். v. i) 41 1/2 சதுர அடி நிலம் கட்டிடத்துக்கான [Ivது அயிட்டம்]எல்லைகள், வடக்கே பாபு கோவிந்தசெட்டி நிலம், தெற்கே கல்பனா வீடு, கிழக்கே சின்னப்ப செட்டி வீடு, மேற்கே பாபு கோவிந்த செட்டி நிலம். ii) 396 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்துக்கான (IIவது அயிட்டம்), எல்லைகள் : வடக்கே IIவது அயிட்டம் சொத்து, தெற்கே கப்பல்வாடி சாலை, கிழக்கே கல்பனா வீடு, மேற்கே சென்னையசெட்டி, யசோதா நிலம். iii) 2291 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்துக்கான (IIIவது அயிட்டம்), எல்லைகள் : வடக்கே IIவது அயிட்டம் சொத்து, தெற்கே கப்பல்வாடி சாலை, கிழக்கே சின்னப்பச்சேத்தி வீடு மற்றும் காலி நிலம், மேற்கே யசோதா நிலம். **விஸ்தீரணம் விவரம் :** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 41 1/2' அடி., கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் 41 1/2' அடி., தெற்கு வடக்காக கிழக்குப் பக்கம் 1' அடி., தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 1' அடி., மொத்தம்: [Ivது அயிட்டம்] 41 1/2 சதுர அடி. **விஸ்தீரணம் விவரம் :** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 5 1/2' அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் 5 1/2' அடி, தெற்கு வடக்காக கிழக்குப் பக்கம் 72' அடி, தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 72' அடி, மொத்தம்: [IIவது அயிட்டம்] 396 சதுர அடி. **விஸ்தீரணம் விவரம் :** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 45' அடி., கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் 34' அடி., தெற்கு வடக்காக கிழக்குப் பக்கம் 67' அடி., தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 49' அடி., மொத்தம்: [IIIவது அயிட்டம்] 2291 சதுர அடி மற்றும் அனைத்து உரிமைகள் மற்றும் பாதை உட்பட.
2	**1. திரு. பெருமாள் அம்மாசி,** S/o அம்மாசி. எஸ், எண். 104/1, பனங்காட்டூர், திண்டமங்கலம், சேலம், தமிழ்நாடு 636455 மின்னஞ்சல் skavi6230@gmail.com தொலைபேசி: 6381955866. **மேலும்:** Kr எஸ்.எப்.எண். 15/3C2, அமானி திண்டமங்கலம் கிராமம், ஓமலூர், பின்கோடு : 636455 **2. திருமதி ராஜேஸ்வரி பெருமாள்,** D/o/w/o அல்லிமுத்து.எஸ், எண். 104/1, பனங்காட்டூர், திண்டமங்கலம், சேலம், தமிழ்நாடு 636455. கடன் கணக்கு எண்.ABS_OMLA000000615641	14.10.2025 & 03.10.2025 மொத்த நிலுவைத் தொகை 09.10.2025 அன்று ரூ.24,16,158/-	நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள கட்டிடம் உள்ளிட்ட சொத்து. தமிழ்நாடு, சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், ஓமலூர் சார் பதிவு மாவட்டம், திண்டமங்கலம் கிராமம், ஓமலூர் தாலுக்கா, பழைய சர்வே எண்.15/3C2, புஞ்சை ஹெக்டே. 018.50, கிஸ்ட்.1.39. புதிய துணைப்பிரிவு பட்டா எண்.1368ன் படி, புதிய சர்வே எண். 15/3C2b, புஞ்சை ஹெக்டேர்.0–02.93, கிஸ்ட். 0.30. அதன் எல்லைகள் : கிழக்கில் – வடக்கு தெற்காக 22 ¾ லிங்க் அகலம் பாதை மற்றும் சொத்து ரமேஷுக்கு சொந்தமானது, மேற்கில் – சொத்து மல்லிகா மற்றும் சாந்திக்கு சொந்தமானது, வடக்கில் – சர்வே எண். 30, தெற்கில் – சொத்து எஸ். எண். 15/3C2, ஈஸ்வர கவுண்டருக்கு சொந்தமானது. சொத்து பரப்பளவு: மொத்தம் 0.07 ¼ சென்ட் நிலம் மற்றும் முழுமையாகவும், அனைத்து பாதை உரிமைகளுடன். தற்போதுள்ள கட்டுமானம் மற்றும் கட்டிடங்களுடன்.

மேலும் வட்டியுடன், மேலே குறிப்பிடப்பட்ட தேதியிட்ட தொடர்புடைய கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், கட்டணங்கள் போன்றவற்றுடன் பணத்தை திரும்ப செலுத்தும் நாள் வரை செலுத்த வேண்டும். மேற்கூறியபடி கடன்தாரர்கள் ABCLக்கு பணம் செலுத்தத் தவறினால், பின்னர் ABCL மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்) / அசையாச் சொத்து(கள்) மீது மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ், செலவுகள் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பாக மேற்கூறிய கடன்தாரர்/ சட்ட வாரிசு(கள்) / சட்ட பிரதிநிதி(கள்) ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்.
மேற்கூறிய கடன்தாரர்/சட்டப்பூர்வ வாரிசுகள்/சட்டப் பிரதிநிதிகள் மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்து/அசையாச் சொத்துக்களை ABCL இன் முன் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல் விற்பனை, குத்தகை அல்லது வேறு விதமாக மாற்றுவது ஆகியவை மேற்கண்ட சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது. இது 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க (54 ஆப் 2002) பிரிவு 13(2)ன் கீழ் இறுதி அறிவிப்பு என்பதை நினைவில் கொள்ளவும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் அல்லது அனைத்து உரிமைகளையும் கடன்தாரர்களுக்கு எதிராக பயன்படுத்த ABCLக்கு உரிமை உள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

இடம் : கிருஷ்ணகிரி, சேலம், தமிழ்நாடு
தேதி : 17.10.2025
ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்

ஆதித்ய பிர்லா கேபி டல் லிமிடெட்
ADITYA BIRLA CAPITAL
பதிவு அலுவலகம் : இந்தியன் ரயான் காம்பவுண்ட், வேரவல், குஜராத் 362 266.
கிளை அலுவலகம்: 12வது தளம், ஆர் டெக் பார்க், நிர்லான் காம்ப்ளக்ஸ், ஹப் மால் அருகில், கோரேகான் (கி), மும்பை 400 063, மகாராஷ்டிரா.

மின்–ஏல விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 9(1)ன் கீழ் அசையா சொத்துக்கள் மின்னணு ஏல விற்பனைக்கான 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் இடையேயான ஒருங்கிணைப்பின் காரணமாக, 24.03.2025 அன்று அகமதாபாத்தில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட 11.03.2024 தேதியிட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து தொடர்பாக ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் தொடங்கிய அனைத்து SARFAESI நடவடிக்கைகளும், ஒருங்கிணைந்த நிறுவனமான ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.
ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / ஈடுபெற்ற கடன் வழங்கியவர், ஈடுபெற்ற கடனாளியின் ஈடுபெற்ற கடன்களை மீட்டெடுப்பதற்காக, 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் (SARFAESI) பிரிவு 13(2) இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகைகளுக்கு, பின்வரும் கடன்தாரர்கள் ம